ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 7 PW- 6

| | |
|---|---|
| Name | : **தனலெட்சுமி (கண்ணுற்ற சாட்சி)** |
| Father's/Husband's Name | : **ஆனந்தன்** |
| Village | : **செல்லப்ப சின்னாம்பட்டி** |
| Taluk | : **வாகைகுடி** |
| District | : **கிருஷ்ணகிரி** |
| Age | : 26/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of February 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர், 6ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

**1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.09.2019ம் தேதி இரவு 8.00 மணிக்கு எங்கள் ஊரில் என் தாத்தா சின்னழகன் பெயரிலுள்ள சொத்து சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ராசு, நல்லியப்பன் மற்றும் பெருமாள் ஆகியோர்கள் எங்கள் ஊர் பொது மந்தைக்கு வரச்சொன்னார்கள். அதன்பேரில் எனது அப்பா தங்கராஜ், அம்மா காந்திமதி, அண்ணன் தங்கப்பாண்டி ஆகியோர்கள் சென்றிருந்தார்கள். அப்போது சொத்து சின்னழகன் பெயருக்கு மாறிவிட்டதால் சொத்து பிரச்சினையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு ராசு என்பவர் சொன்னதாகவும், என் அம்மா முடியாது என்று மறுத்ததால் நோத்தா, நொம்மா, தேவடியாள் என்று தகாத வார்த்தைகளால் என் அம்மாவை பார்த்து ராசு என்பவர் சொல்லியுள்ளார், அதனால் என் அம்மா**

அழுதுகொண்டு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். பின்னர் மறுநாள் 10.09.2019 ம் தேதி இரவு 10.00 மணிக்கு எங்கள் வீட்டில் நான் எனது 1–1/2 மாத குழந்தை மற்றும் என் அண்ணன் அ.சா.1 ஆகியோர் இருந்தபோது ராசு, ராமசாமி, சுப்பிரமணி, பூஞ்சோலை, செல்லத்துரை, நல்லியப்பன் மற்றொருவர் பெயர் தற்போது ஞாபகமில்லை, அடையாளம் காட்டமுடியும், ஆகிய 7 பேரும் சேர்ந்து எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் அண்ணன் அ.சா.1 ஐ தறதறவென ரோட்டில் இழுத்து சென்றார்கள், தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசி ராசு என்பவர் என் அண்ணனை கம்பாலும், மற்றவர்கள் கையாலும் சரமாரியாக அடித்தார்கள். நான் தடுக்க சென்ற என்னை ராசு என்பவர் கம்பால் வலது தொடையில் அடித்து வீக்கக்காயத்தை ஏற்படுத்தினார். நல்லியப்பன் என்பவரும் என்னை நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார். எனது அண்ணனுக்கு வலது கையிலும், நெற்றியிலும் ஊமைக்காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. எல்லோரும் எங்களை அடித்ததால் நான் பயந்து கத்தினேன். அப்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். ராசு என்பவர் என் அண்ணனை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்கள். பின்னர் நானும், என் அண்ணனும் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்னர் நத்தம் அரசு மருத்துவமனை சென்று, எனக்கு கைக்குழந்தை இருந்ததால் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் என் அண்ணன் மீண்டும் மருத்துவமனை சென்று ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) 09.09.2019 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். 09.09.2019 ம் தேதி பேசிய விபரங்கள் எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் சரிதான். 10.09.2019 ஆம் தேதி வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் எனது அண்ணனும் இருந்தோம். காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான், எனது அண்ணன், அம்மா, அப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர் சென்றோம். புகாரை யார் எழுதினார் என்றால் எனது அண்ணன் எழுதினார். புகாரில் என்ன எழுதி இருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு எப்பொழுது சென்றோம் என்றால் நானும் எனது அண்ணனும் சம்பவம் நடந்த அன்றைய தினமே இரவு 11.00 மணி அளவில் சென்றோம். நான் மட்டும் வெளி நோயாளியாக மருத்துவம் பார்த்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் ஊமை காயம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கன்றிப்போன காயமா வீக்க காயமா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) இந்த வீடு ஆனது ஒரு ரூம் மற்றும் ஹால் உள்ளது. ரூமின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் எட்டுக்கு எட்டு இருக்கும். ஹால் அளவு பத்துக்கு பத்து இருக்கும். ஹாலில் டிவி, பிரிட்ஜ் போன்ற பொருட்கள் இருந்ததா என்றால் இல்லை. சம்பவத்தின் காரணமாக வீட்டில் பொருட்கள் ஏதும் உடையவோ, சேதாரம் ஏற்படவோ இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இதற்கு முன்பு சாட்சியம் அளித்த நபர்கள் எனது குடும்ப நபர்கள் என்றால் சரிதான். எனது வீடு ஆனது ஊரில் ஒதுக்குப்புறத்தில் உள்ளதா அல்லது நடு மத்தியில் உள்ளதா என்றால் நடுமத்தியில் உள்ளது. சம்பவம் நடந்து யார் யார் வந்தார்கள் என்றால் எனது அம்மா, அப்பா, பக்கத்து வீட்டை சேர்ந்த பழனிச்சாமி, அவரது மனைவி வீரம்மாள் ஆகியோர் வந்தார்கள். வேறுயாரும் வந்தார்களா என்றால் இல்லை.

எனது வீட்டிலிருந்து எதிரிகள் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் அடி அளவில் சொல்லத் தெரியாது சிறிது தூரத்தில் உள்ளது.

4) புகார்தாரர் எனது உடன் பிறந்த அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எனது அண்ணனுக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.02.04 21:08:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்